# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8074796

C

1. District மாவட்டம் : நாகப்பட்டினம் PS காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year ஆண்டு : 2021 FIR No. மு.த.அ. எண் : 10/2021 Date நாள் : 30.09.2021.

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7, 7-A of the Prevention of Corruption Act 1988 as amended by the P.C (Amendment) Act 2018.
(ii) Act சட்டம்: P.C. Act Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 30.09.2021 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 14.45 hrs Time to : நேரம் வரை 20.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.09.2021 Time : நேரம் 23.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2 km வடக்கு, உதவி செயற்பொறி-
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி —யாளர் அலுவலகம், நாகப்பட்டினம் உபகோட்டம், ஊரக வளர்ச்சி துறை, நாகப்பட்டினம் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. ஸ்ரீராஜசேகர பாண்டியன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அழகர்சாமி.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 51/2021 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர், (g) Address : முகவரி சமூக பாதுகாப்பு திட்டம், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட துணை ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. Tmt. M. ரூபி, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சி துறை, நாகப்பட்டினம். 2. Tr. S. மணிகண்டன், S/o. செல்லையன், No: 626, வேளாங்கண்ணி கோயில் தெரு, சிக்கல், 3. Tr. R. ராஜேந்திரன், S/o. ராமசாமி, No: 23/1, JJ நகர், வாட்டாக்குடி, வேதாரண்யம் தாலுக்கா, 4. Tr. R. ஜனார்த்தனன், S/o. ராஜேந்திரன், கொரடாச்சேரி, அகரம் (Po). 5. Tr. S. நிர்மலன், S/o. செல்வம், எண் 51, அம்பேத்கர் கோயில் தெரு, ஒரத்தூர், 6. Tr. G. மனோகரன், S/o. கோபால், No: 2/162 தெற்கு தெரு, மணக்குடி, திருக்குவளை தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரனை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து சமர்பிக்கப்படுகிறது

இன்று 30.09.2021 ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் M.அருள்பிரியா ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.A.முத்துமுருகேசபாண்டியன், தனிவட்டாட்சியர், சமூக பாதுகாப்புதிட்டம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் கொடுத்த அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. 30.09.2021 நாகப்பட்டினம். அனுப்புநர் திரு.A.முத்துமுருகேசபாண்டியன், தனிவட்டாட்சியர், சமூக பாதுகாப்புதிட்டம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 30.09.2021 ஆம் தேதி 14.45 மணி முதல் 20.00 மணி வரை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள, நாகப்பட்டினம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திலுள்ள, நாகப்பட்டினம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30.9.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.10.2021.

Name: பெயர் M. அருள்பிரியா.
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

உபகோட்டம், ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது 1)திருமதி.M.பேபி, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சிதுறை, நாகப்பட்டினம் உபகோட்டம் என்பவரிடமிருந்து ரூபாய் 12,000/-, 2)திரு.S.மணிகண்டன், த/பெ.செல்லையன், ஊராட்சிமன்ற தலைவர், வலிவலம் ஊராட்சி என்பவரிடமிருந்து ரூபாய் 15,000/-, 3)திரு.R.ஜெகதீஷ், த/பெ.ராமதாஸ், ஊராட்சி ஒன்றியகுழு துணைத்தலைவர், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், என்பவரிடமிருந்து ரூபாய் 9,000/- மற்றும் M.Book No.272/2020-2021 மற்றும் அதுதொடர்பான கோப்புகள், 4)திரு.R.வினோத்ராஜ், த/பெ.ராஜேந்திரன், அம்பல்(அரசு பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.அபூர்வம், அம்பல் அவர்களின் பேரன்) என்பவரிடமிருந்து ரூபாய் 2,500/-, 5)திரு.S.குமணன், த/பெ.செல்வம், பொறக்குடி(அரசு பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.அபூர்வம், அம்பல் அவர்களின் மகன்) என்பவரிடமிருந்து ரூபாய் 20,000/-, 6)திரு.G.மனோகரன், த/பெ.குருசாமி, தனியார் ஒப்பந்ததாரர், மனக்குடி என்பவரிடமிருந்து ரூபாய் 12,000 மற்றும் Estimate ந.க.எண்.0212/2021/அ1, நாள் 04.08.2021- பாங்கல், Estimate ந.க.எண்.0212/2021/அ1, நாள் 04.08.2021- கல்லிமேடு மற்றும் கொத்தங்குடி ஊராட்சி தொழுதூர் படுகை தெரு, தார்சாலை அமைத்தல் தொடர்பான புகைப்படங்கள் 7) திரு.K.சுதாகர், த/பெ.கல்யாணசுந்தரம், வால்மங்கலம் என்பவரிடமிருந்து M.Book.1314/ 2020-2021 மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றை அவர்களிடமிருந்து சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் திருமதி.M.பேபி, உதவி செயற்பொறியாளர், கையூட்டாக பெற்று வைத்திருந்த பணமும் மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் அங்குள்ள அலுவலர்களுக்கு, ஒப்பந்தகாரர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கு சம்பந்தப்பட்டவர்கள் ஒப்பந்த பணிக்காக கையூட்டாக கொடுக்க வைத்திருந்த மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் என ரூபாய் 70,500/- மற்றும் ஆவணங்கள் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது மகஜரில் கண்டபடி ஒப்பந்தகாரர்களிடமிருந்து குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக பணம் கேட்டு பெற்று வைத்திருந்திருக்கிறார் என்ற அடிப்படையில், அவரால் கணக்கு கூற இயலாத ரூபாய் 12,000/- திருமதி.M.பேபி என்பவரிடமிருந்தும் மற்றும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்ற அடிப்படையில் 1. திரு.S.மணிகண்டன், 2. திரு.R.ஜெகதீஷ், 3. திரு.R.வினோத்ராஜ், 4. திரு.S.குமணன், 5. திரு.G.மனோகரன் ஆகியவர்களிடமிருந்து ரூபாய் 58,500/- என ஆகமொத்தம் ரூபாய் 70,500/- பணம் மற்றும் திரு.S.குமணன், த/பெ.செல்வம் என்பவரின் கழிவுநீர் சிமெண்ட் கால்வாய் தொடர்புடைய M.Book No.1652/2021 மற்றும் தொடர்புடைய ஆவணங்களையும், திரு.S.மணிகண்டன், த/பெ.செல்லையன் என்வரின் மூன்று படித்துறை தொடர்பான M.Book No.10/2020-21, M.Book No.11/2020-21, M.Book

No.12/2020-21 மற்றும் அது தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றையும் அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்டது. நாகப்பட்டினம் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும் மற்றும் வெளிநபர்களிடமும் கைப்பற்றப்பட்ட 12 ஆவணங்கள், AD என்று எழுதப்பட்ட பணம் வைக்கப்பட்டிருந்து கவர் ஒன்று மற்றும் திருமதி.M.பேபி, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சிதுறை, நாகப்பட்டினம் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி 1.திருமதி.M.பேபி, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சிதுறை, நாகப்பட்டினம், 2)திரு.S.மணிகண்டன், த/பெ.செல்லையன், (ஊராட்சிமன்ற தலைவர், வலிவலம் ஊராட்சி) எண் 626, பெருமாள் கோவில் தெரு, காருகுடி, திருக்குவளை தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம். 3)திரு.R.ஜெகதீஷ், த/பெ.ராமதாஸ், (ஊராட்சி ஒன்றியகுழு துணைத்தலைவர், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம்), எண் 23/1, JJ நகர், வாட்டாக்குடி, வேதாரண்யம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம். 4)திரு.R.வினோத்ராஜ், த/பெ.ராஜேந்திரன், பொறக்குடி அம்பல் அஞ்சல், நாகப்பட்டினம் மாவட்டம். 5)திரு.S.குமணன், த/பெ.செல்வம், எண் 5/21, அய்யனார் கோவில் தெரு, பொறக்குடி, 6)திரு.G.மனோகரன், த/பெ.குருசாமி, எண் 2/162, தெற்குதெரு, மனக்குடி, திருக்குவளை தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் ஆகியவர்களின் மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) அ.முத்துமுருகேசபாண்டியன் **30.9.2021**. (A. முத்துமுருகேசபாண்டியன்) தனிவட்டாட்சியர், சமூக பாதுகாப்புதிட்டம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர். இன்று 30.09.2021 ஆம் தேதி பகல் சுமார் 14.45 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திலுள்ள நாகப்பட்டினம் உபகோட்டம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தை திரு.A.முத்துமுருகேசபாண்டியன், தனிவட்டாட்சியர், சமூக பாதுகாப்புதிட்டம், நாகப்பட்டினம் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் அவர்கள் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.M.அருள்பிரியா மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து தற்காலிக மாவட்ட துணை ஆய்வுகுழு ஆய்வாளர் திரு.A.முத்துமுருகேசபாண்டியன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திலுள்ள நாகப்பட்டினம் உபகோட்டம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ்

நடைப்பெற்ற சாலைகள் அமைத்தல், அங்கன்வாடி கட்டிடம் அமைத்தல், படித்துறைகள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்றது தொடர்பான அளவீடு புத்தகத்திலுள்ள அளவீடுகளை உதவி செயற்பொறியாளர் அவர்கள் நேரில் சென்று மேலாய்வு செய்து உதவி பொறியாளரால் செய்யப்பட்ட அளவீடுகளை அனுமதித்து பட்டியலை அனுமதிப்பதற்கு சம்மந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை உதவி செயற்பொறியாளர் அவர்கள் கையூட்டாக கேட்டுப்பெற்றுக்கொண்டு பட்டியல் தொகைகளுக்கு அனுமதி வழங்குவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலின்பேரில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட A.முத்துமுருகேசபாண்டியன் ஆகிய என்னிடம் தகவல் தெரிவித்ததன் அடிப்படையில் இன்று 30.09.2021 ஆம் தேதி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சுமார் 14.00 மணிக்கு வந்தும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 30.09.2021 ஆம் தேதி சுமார் 14.30 மணிக்கு இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திலுள்ள நாகப்பட்டினம் உபகோட்டம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகத்திற்கு சுமார் 14.45 மணிக்கு வந்து, மேற்படி நாகப்பட்டினம் விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திலுள்ள நாகப்பட்டினம் உபகோட்டம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் மாவட்ட நாகப்பட்டினம் உபகோட்ட ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகமானது நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் கிழக்கு புறம் பார்த்த வாயிலுடன் கூடிய முதல் அறையில் அமைந்துள்ளது. மேற்படி நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கட்டிடமானது தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் அமைந்துள்ளது. மேற்படி கட்டிடத்தின் முதல் தளத்தில் நுழைவு வாயிலின் எதிர்புறம் இரும்பு நாற்காலிகளுடன் கூடிய வரவேற்பு அறையும், அதனை அடுத்தார்போல் மேற்கு பக்கம் பொறியியல் பிரிவு அறையும், அதற்கு மேற்கே Engineer Section Computer Room-ம், அதற்கு மேற்கே Executive Engineer(RD) அறையும், பொறியியல் பிரிவு அறைக்கு எதிர்புறம் வடக்கு தெற்காக உள்ள வராண்டாவின் மேல்புறம் முதலில் உதவி செயற்பொறியாளர்(ஊரக வளர்ச்சி) அறையும், அதற்கு வடக்கே நாடாளுமன்ற உறுப்பினர் அறையும் அதற்கு அடுத்தார்போல் பல அறைகளும் அலுவலகங்களும் உள்ளது. நாகப்பட்டினம் உபகோட்ட ஊரக வளர்ச்சி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தின் அலுவலக அறை மற்றும் வரவேற்பு அறையில் இருந்த 1)திருமதி.M.பேபி, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சிதுறை, நாகப்பட்டினம் உபகோட்டம், 2)திரு.S.செல்வம்,

உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், 3)திருமதி.P.சிவஞானம், இளநிலை வரைதொழில் அலுவலர், உதவி செயற் பொறியாளர் அலுவலகம், 4)செல்வி.R.மேரி, Unauthorized Computer Operator, உதவி செயற்பொறியாளர் அலுவலகம், ஊரக வளர்ச்சிதுறை, நாகப்பட்டினம், 5)திரு.S.மணிகண்டன், த/பெ.செல்லையன், ஊராட்சிமன்ற தலைவர், வலிவலம் ஊராட்சி 6)திரு.R.ஜெகதீஷ், த/பெ.ராமதாஸ், ஊராட்சி ஒன்றியகுழு துணைத்தலைவர், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், 7)திரு.R.வினோத்ராஜ், த/பெ.ராஜேந்திரன், அம்பல்(அரசு பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.அபூர்வம், அம்பல் அவர்களின் பேரன்), 8)திரு.S.குமணன், த/பெ.செல்வம், பொதக்குடி(அரசு பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.அபூர்வம், அம்பல் அவர்களின் மகன்), 9)திரு.G.மனோகரன், த/பெ.குப்புசாமி, தனியார் ஒப்பந்ததாரர், மனக்குடி, 10)திரு.K.புஷ்பராஜ், த/பெ.கண்ணதாசன், அகலங்கன், 11)திரு.M.அன்பரசன், த/பெ.மணிசேகரன், ஊராட்சி செயலாளர், பண்டாரவடை, 12)திரு.K.மதிவாணன், ஓட்டுநர், உதவி செயற்பொறியாளர் அலுவலகம் மற்றும் சிலர் இருந்தனர். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் நாகப்பட்டினம் ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.N.பசுபதி அவர்களை அவரது அறையிலிருந்து அழைத்துவந்து அவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையில் கீழ்கண்ட நபர்கள் வைத்திருந்து ஆஜர் செய்த தொகைகள் சரியான முகாந்திரம் கூறிய தொகை எனத்தெரிய வந்ததால் அந்தத் தொகை சம்மந்தப்பட்ட நபர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடியதாக தெரியவந்த கையூட்டு தொகையானது உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கலாம் என்பதன் அடிப்படையிலும், நாகப்பட்டினம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நடைபெற்ற சாலைகள் அமைத்தல், அங்கன்வாடி கட்டிடம் அமைத்தல், படித்துறைகள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்றது தொடர்பான அளவீடு புத்தகத்திலுள்ள அளவீடுகளை உதவி செயற்பொறியாளர் அவர்கள் நேரில் சென்று மேலாய்வு செய்து உதவி பொறியாளரால் செய்யப்பட்ட அளவீடுகளை அனுமதித்து பட்டியலை அனுமதிப்பதற்கு சம்மந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை உதவி செயற்பொறியாளர் அவர்கள் கையூட்டாக கேட்டு அதனை வழங்குவதற்காக வைத்திருந்த மற்றும் கொடுத்த கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான

மொத்தப்பணம் ரூபாய்.**70,500/-**ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவிமற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்டரூபாய் |
|---|---|---|---|
| 1 | திருமதி.M.பேபி, உதவி செயற்பொறியாளர், | 220 | 12,000 |
| 2 | திரு.S.செல்வம், உதவி பொறியாளர் | 1,320 | - |
| 3 | திருமதி.P.சிவஞானம், இளநிலை வரைதொழில் அலுவலர் | 270 | - |
| 4 | செல்வி.E.மேரி, Unauthorized Computer Operator, உதவி செயற்பொறியாளர் அலுவலகம் | 320 | - |
| 5 | திரு.S.மணிகண்டன், த/பெ.செல்லையன், ஊராட்சிமன்ற தலைவர், வலிவலம் ஊராட்சி | 500 | 15,000 |
| 6 | திரு.R.ஜெகதீஷ், த/பெ.ராமதாஸ், ஊராட்சி ஒன்றியகுழு துணைத்தலைவர், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், | 330 | 9,000 |
| 7 | திரு.R.வினோத்ராஜ், த/பெ.ராஜேந்திரன், அம்பல்(அரசு பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.அபூர்வம், அம்பல் | 160 | 2,500 |
| 8 | திரு.S.குமணன், த/பெ.செல்வம், பொதக்குடி(அரசு பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.அபூர்வம், அம்பல் அவர்களின் மகன்) | - | 20,000 |
| 9 | திரு.G.மனோகரன், த/பெ.குப்புசாமி, தனியார் ஒப்பந்ததாரர், மனக்குடி, | 1,430 | 12,000 |
| 10 | திரு.K.புஷ்பராஜ், த/பெ.கண்ணதாசன், அகலங்கன் | 11,830 | - |
| 11 | திரு.M.அன்பரசன், த/பெ.மணிசேகரன், ஊராட்சி செயலாளர், பண்டாரவடை, | 2,600 | - |
| 12 | திரு.K.மதிவாணன், ஓட்டுநர், உதவி செயற்பொறியாளர் | 700 | - |
| 13 | திரு.K.சுதாகர், த/பெ.கல்யாணசுந்தரம், வால்மங்கலம் | 20 | - |
| | **மொத்தம்** | **19,700** | **70,500** |

திடீர் சோதனையின்போது திருமதி.M.பேபி, உதவி செயற்பொறியாளர் என்பவரது ஹேண்ட் பேக்கிலிருந்து ரூபாய் 12,220/- யை எடுத்து ஆஜர் செய்தார். அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் **220/-** திருமதி.M.பேபி, உதவி செயற்பொறியாளர் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டு, சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் **12,000/-** மட்டும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது திரு.S.மணிகண்டன், த/பெ.செல்லையன், ஊராட்சிமன்ற தலைவர், வலிவலம் ஊராட்சி என்பவர் அவரது சட்டைபையில் வைத்திருந்த ரூபாய் 8,000 மற்றும் ஒரு காக்கி கவரில் AD என்று எழுதப்பட்டதில் ரூபாய் 7,500 இருந்தது. ஆக மொத்தம் ரூபாய் 15,500/- இருந்தது. அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் **500/-** திரு.S.மணிகண்டன் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மீதமுள்ள ரூபாய் 15,000/- தனது ஊராட்சியில் மூன்று படித்துறை கட்டியதற்காக உதவி செயற் பொறியாளரிடம் காலையில் கொடுத்த M.Book –யை திருப்பி வாங்குவதற்காக வந்ததாக கூறியதன் அடிப்படையில், மேற்கண்ட கவர் மற்றும் தனியாக வைத்திருந்த பணம் உதவி செயற்பொறியாளருக்கும், அலுவலர்களுக்கும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதால் மேற்கண்ட பணம் ரூபாய் **15,000/-** மற்றும் AD என்று எழுதப்பட்ட கவர் ஒன்று கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது திரு.R.ஜெகதீஷ், த/பெ.ராமதாஸ், ஊராட்சி ஒன்றியகுழு துணைத்தலைவர், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் என்பவர் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 9,330/- மற்றும் அவர் வைத்திருந்த M.Book No.272/2020-2021 மற்றும் அது தொடர்புடைய கோப்புகள் ஆகியவற்றை ஆஜர் செய்தார். அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் **330/-** திரு.R.ஜெகதீஷ் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மீதமுள்ள ரூபாய் 9,000/- பற்றி விசாரணை செய்த போது, அவர் தனது தந்தை ராமதாஸ் பெயரில் தலைஞயிறு ஒன்றியத்தில் வாட்டாக்குடி மயான சாலை பணியை முடித்துவிட்டதாகவும் அது தொடர்பாக தனது தந்தை M.Book No.272/2020-2021 மற்றும் அதுதொடர்பான கோப்புகளை கொடுத்து உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தில் கொடுக்க வந்ததாகவும் கூறியதன் அடிப்படையில், மேற்கண்ட M.Book No.272/2020-2021 மற்றும் அதுதொடர்பான கோப்புகள் மற்றும் தனியாக வைத்திருந்த பணம் உதவி செயற்பொறியாளருக்கும், அலுவலர்களுக்கும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதால் மேற்கண்ட பணம் ரூபாய் **9,000/-** மற்றும் M.Book No.272/2020-2021 மற்றும் அதுதொடர்பான கோப்புகள் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது திரு.S.குமணன், த/பெ.செல்வம், பொதக்குடி(அரசு பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.அபூர்வம், அம்பல் அவர்களின் மகன்) என்பவர் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 20,000/- யை ஆஜர் செய்தார். அவர் வைத்திருந்த ரூபாய்

20,000/- பற்றி விசாரணை செய்த போது, அவர் தனது அம்மா அபூர்வம் ஒப்பந்தகாரர் என்றும் தனது உறவினர் வினோத்ராஜ் எடுத்து செய்யும் அம்பல் செட்டிதெருவில் கழிவுநீர் சிமெண்ட் கால்வாய் கட்டி முடித்ததற்காக உதவி செயற் பொறியாளர் அலுவலகத்திற்கு வினோத்ராஜ் அவர்களுடன் வந்தார் என்று கூறியதன் அடிப்படையில், மேலும் விசாரணையின்போது திரு.வினோத்ராஜ் வைத்திருந்த ரூபாய் 2,500/- மற்றும் மேற்படி திரு.குமணன் அவர்கள் வைத்திருந்த பணம் உதவி செயற் பொறியாளருக்கும், அலுவலர்களுக்கும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதால் மேற்கண்ட பணம் ரூபாய் **20,000/-** கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.வினோத்ராஜ் அவர்கள் சரியான முகந்திரம் கூறிய ரூபாய் 160 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது திரு.G.மனோகரன், த/பெ.குப்புசாமி, தனியார் ஒப்பந்ததாரர், மனக்குடி, என்பவர் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 13,430/- யை ஆஜர் செய்தார். அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் **1430/-** திரு.G.மனோகரன் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மீதமுள்ள ரூபாய் 12,000/- பற்றி விசாரணை செய்த போது, அவர் கல்லிமேட்டில் செய்யவுள்ள சிமெண்ட் ரோடு போடுவதற்காக மதிபீட்டு அறிக்கை பெறுவதற்காக தொழில்நுட்ப அனுமதி உதவி செயற்பொறியாளரிடம் பெறுவதற்காக உதவி செயற் பொறியாளர் அலுவலகத்திற்கு வந்ததாக கூறியதன் அடிப்படையில், அவர் வைத்திருந்த பணம் உதவி செயற் பொறியாளருக்கும், அலுவலர்களுக்கும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதால் மேற்கண்ட பணம் ரூபாய் **12,000/-** கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த Estimate ந.க.எண்.0212/2021/அ1, நாள் 04.08.2021- பாங்கல், Estimate ந.க.எண்.0212/2021/அ1, நாள் 04.08.2021- கல்லிமேடு மற்றும் கொத்தங்குடி ஊராட்சி தொழுதூர் படுகை தெரு, தார்சாலை அமைத்தல் தொடர்பான புகைப்படங்கள் ஆகியவை மேல்நடவடிக்கைகாக கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது திரு.K.சுதாகர், த/பெ.கல்யாணசுந்தரம், வால்மங்கலம் என்பரை சோதனை செய்த போது அவரிடம் ரூபாய் 20 மற்றும் M.Book.1314/ 2020-2021 மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவை இருந்தது. மேற்படி பணம் பற்றி சரியான முகந்திரம் கூறியதால் ரூபாய் 20 திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் வைத்திருந்த M.Book.1314/ 2020-2021 மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் மற்றும் கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.**70,500/-,** மேற்கண்ட விபரப்படியான AD என்று எழுதப்பட்ட கவர் ஒன்று, 1)M.Book No.272/2020-21 தொடர்புடைய ஆவணங்கள்,

2)M.Book.1314/ 2020-2021 தொடர்புடைய ஆவணங்கள், 3)Estimate ந.க.எண்.0212/2021/அ1, நாள் 04.08.2021- பாங்கல், 4)Estimate ந.க.எண்.0212/2021/அ1, நாள் 04.08.2021- கல்லிமேடு, 5)கொத்தங்குடி ஊராட்சி தொழுதூர் படுகை தெரு, தார்சாலை அமைத்தல் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் 6)வருகை பதிவேடு 2018 முதல் 2021 வரை, 7)Technical Sanction Register, 8)M.Book No.1652/2021 தொடர்புடைய ஆவணங்கள், 9)M.Book No.10/2020-21 தொடர்புடைய ஆவணங்கள், 10)M.Book No.11/2020-21 தொடர்புடைய ஆவணங்கள், 11)M.Book No.12/2020-21 தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் 12)Bill Passing Register ஆகியவை இந்த திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின்போது மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் திருமதி.M.பேபி, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சிதுறை, நாகப்பட்டினம் என்பவரை விசாரணை செய்து தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 30.09.2021 ஆம் தேதி இரவு 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 30.09.2021 ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.10/2021, U/s. 7 and 7-A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(M.அருள்பிரியா),
காவல் ஆய்வாளர், 30/09/2021
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர் மற்றும் 1)திருமதி.M.பேபி, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சிதுறை, நாகப்பட்டினம் உபகோட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(M.அருள்பிரியா),
காவல் ஆய்வாளர், 30/09/2021
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.